ஜூலை 15 — வாழ்விலோர் திருநாள்

REGD. No. M. 6311 PHONE No. 55630

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர் : அண்ணாதுரை

The "Nam Nadu": A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F

தனி இதழ் : ஒரு அணா
இலங்கையில் 10 சதம்

சென்னை : ஆனிமீ 31உ வியாழன் (15—7—54)
வெளியூர் : ஆடிமீ 1உ வெள்ளி (16—7—54)

மலர் : 2
இதழ் : 27

சித்தூர் தமிழ்ப் பகுதி 'விசால ஆந்திரா'வில் இல்லை

இந்த உண்மையை ஆந்திரர் அறிய வேண்டும்

வாய்ப்பு நேர்ந்தால் தென்னேட்டியைக் கண்டு கூறுவேன்

அண்ணாதுரை அறிவிப்பு

' சித்தூர் பிரச்னை சாதாரணமானதல்ல ; ஒரு நல்ல போராட்டம் ஏற்படக்கூடும் ' அதற்கு நாம், துவேஷம் இல்லாத முறையில் ஆந்திரர்களையும், தமிழர்களையும் கலந்து, அற வழி நின்று, பொறுப் புணர்வுடன் காரியங்கள் செய்ய வேண்டும் ;......அமைதியான முறையில், நேசபாவ உணர்வுடன், இந்தப் பிரச்னைக்கு முடிவு காண தி. மு கழகம் முயலும்,"

என்று, பொதட்டூர்பேட்டையில் நடைபெற்ற சித்தூர் மாவட்ட மாநாட்டில் பொதுவாகக் குறிப்பிட்ட, பொதுச்செயலாளர் அண்ணாதுரை அவர்கள், அதே சமயத்தில், ஆந்திர மக்களுக்கும் ஓர் வேண்டுகோள் விடுத்தார். அதன் சாரம் இங்கே தரப்படுகிறது :—

"ஆந்திரர்களுக்கு ஒன்று சொல்லுவேன் — சித்தூர் தமிழ்ப் பகுதிகள் அல்ல— அவர்களின் விசால ஆந்திரக் கொள்கைக்குத் தேவையானது!

ஐதராபாத்திலே இருக்கும் தெலுங்குப் பகுதிகள்தான் அவர்களுக்கு நியாயமாகக் கிடைக்க வேண்டியவை! இன்று, டில்லியும், நிசாமும் ஐதராபாத்தைத் துண்டாடுவதில்லை என்று ஒப்பந்தம் செய்திருக்கின்றனர். அந்த ஒப்பந்தத்தை உடைத்து, ஐதராபாத்தைத் துண்டாடி, அதில் உள்ள தெலுங்கு மாவட்டங்களை ஆந்திர மாநிலத்துடன் சேர்த்தால்தான் தங்களது விசால ஆந்திர இலட்சியம் பூர்த்தியாகும்.

அந்த முயற்சியில் அவர்கள் ஈடுபடும்போது— டில்லியை எதிர்த்துப் போரிடும்போது அவர்களுக்குத் தோளோடு தோள் நின்று போராட தி.மு. கழகம் என்றும் தயாராக இருக்கிறது.

ஆந்திரர்கள் தங்கள் கண்ணோட்டத்தை டெல்லியின் பக்கம்தான் இன்று திருப்ப வேண்டும். அதை விடுத்து பொதட்டூர்பேட்டையிலும், ஏகாம்பரகுப்பத்திலும் அவர்கள் கண்வைப்பது நியாயமல்ல! தமிழ் பேசும் மக்களை பெரும்பான்மையாகக் கொண்ட பகுதிகளை தங்களுடன் வைத்துக்கொள்வது, ஆந்திரர்களின் புனிதமான மொழி வழி அரசுக் கொள்கைக்கு உகந்தது அல்ல!

இதைத்தான்—எனக்கு பிரகாசத்தைத் தெரியாவிடினும் தோழர் தென்னேட்டி விசுவநாதத்தைத் தெரியும் — அவரைச் சந்தித்தால், நான் கூறுவேன்,"

இங்கிலாந்தின் இரு செலவுகள்!

★

இங்கிலாந்து பாதுகாப்புச் செலவாக வருடத்தில் 1,60,00,00,000 பவுன்களும் பிரச்சாரத்திற்காக 10,00,00 000 பவுன்களும் செலவு செய்கிறதாம்.

ஜினீவா மாநாடு

அமெரிக்கா கலந்து கொள்கிறது

பாரிஸ், ஜூலை 14

அமெரிக்க உதவி ராஜாங்க அமைச்சர் வால்டர் பெடல் ஸ்மித் இந்தோ—சீனப் பேச்சு வார்த்தைகளில் கலந்துகொள்ள ஜினீவா செல்வார் என்று அறிவிக்கப்பட்டது.

★

பொதுச்செயலாளர் பாராட்டு!

சித்தூர் மாவட்ட தி. மு. க. மாநாட்டினை சிறப்புற நடத்திய தோழர்களுக்குப் பாராட்டு தெரிவிக்கும் முறையில் பொதுச் செயலாளர் அண்ணாதுரை அவர்கள் பேசியதாவது :—

சித்தூர் மாவட்ட தி மு கழக முதலாவது சமூக சீர்திருத்த அரசியல் மாநாடுகள் நேற்றும் இன்றும் சிறப்புற நடைபெற்றிருக்கின்றன. பொதட்டூர்பேட்டையில் மாநாட்டினை [illegible] என்னிடம் அனுமதி கோரியபோது, "சித்தூர் மாவட்டத்தில் இன்னும் நமது தி. மு. கழகக் கிளைகள் நிரம்ப நிலைப்படட்டும், நமது கொள்கைகள் விரிவாக சித்தூர் மாவட்டத்தின் எல்லாப் பகுதி மக்களுக்கும் விளக்கப்பட்ட பின்னரும் மாநாடு நடத்தலாம்" என்று கூறினேன்.

ஆனால், இன்று சித்தூரில் நிலவுகிற அரசியல் சூழ்நிலைகளைக் காட்டி அதற்காகவேனும் தி மு கழகத்தின் அடிப்படை லட்சியம் விளக்கப்பட வேண்டியது அவசியம் என நண்பர்கள் வற்புறுத்தினார்கள்.

தி மு கழகத்தின் மீது நண்பர்கள் கொண்டுள்ள நீங்காத பற்றுதலும், 'நம் பகுதி மக்களும் நமது லட்சியத்தைப் புரிந்து கொள்ள வேண்டும்,' என்ற அவர்களின் ஆசையும் பொதட்டூர்பேட்டையில் மாநாடுகள் நடைபெறத் தூண்டுகோலாக இருந்திருக்கின்றன. அதற்காக—தோழர்களின் பெரு முயற்சிக்காக நான் அவர்களை மிகவும் பாராட்டுகிறேன்; நன்றி கூறிக் கொள்கிறேன்.

எதிர் காலத்திலே இந்தப் பகுதியில் தி மு கழகத்தின் இலட்சியம் விரிவாக ஏற்றுக் கொள்ளப்படும் என்ற நல்ல நம்பிக்கையை இந்த மாநாட்டின் வெற்றி, எனக்குத் தந்துள்ளது.

நேற்று சமுதாய சீர்திருத்த மாநாடு வெகு சிறப்பாக நடைபெற்றது. திராவிட மக்களிடையே நிலவுகிற அர்த்தமற்ற சடங்குகளும், மத, மூட நம்பிக்கைகளும், ஆபாசக் கட்டுக் கதைகளும் அழித்தொழிக்கப்பட்டு, மக்களின் மனம் தூய்மைப் படுத்தப்பட வேண்டியதன் அவசியம் குறித்து நேற்று நடைபெற்ற மாநாடு நல்லதொரு விளக்கத்தைத் தந்திருக்கிறது. நேற்றைய தினம் சொற்பொழிவாற்றிய நண்பர்கள் எல்லாம், இந்நாட்டுச் சமுதாயம் எப்படிப்பட்டதொரு பகுத்தறிவு பெற்ற சமுதாயமாக ஆக்கப்பட வேண்டுமெனத் தி மு கழகம் விரும்புகிறது என்பதை எடுத்துச் சொன்னார்கள். அதுபற்றி நான் அவர்களைப் பாராட்டுகிறேன்.

தி. மு. கழகத்தை வீரர் கோட்டமாக்கிய புதுநாள்

ஆச்சாரியார் எதேச்சாதிகாரம் சரியத் தொடங்கிய நன்னாள்

திராவிடர் பலத்தை வடவர் ஏகாதிபத்தியம் உணர்ந்த பெருநாள்

இப்பொன்னான நாளைக் கண்ட மாவீரர்களுக்கு வீர வணக்கம் செய்யும் வரலாற்று நாள்

ஜூலை—15! எண்ணும்பொழுதும், பிறர் உச்சரித்திடக் கேட்கும்பொழுதும், நம்மையும் அறியாமல், நமது மூச்சில் ஒரு சக்தி பிறக்கிறது! உள்ளத்தில் களிபேருவகை பொங்குகிறது! திராவிடர் எதிர்கால வாழ்வில் ஒரு நம்பிக்கை உதயமாகிறது!

ஜூலை 15! நமது தி. மு. கழக வரலாறு எழுதத் தொடங்கப்பட்ட நன்னாள், அதுதான! அந்த நாள் முன்னணி வீரர்களின் முழக்கத்தால் முகிழ்ந்தது! தந்த விளக்கத்தால் பிறந்தது! கூறி வந்த அறிவுரையால் உருவானது!

தி. மு. கழகப் பொதுச் செயலாளரும், மாற்றுக் கருத்தினரும் மயக்கும் வகையில், அடுக்கடுக்காக ஆதாரங்களைக் கூறி, தனது வழ்க்கை இலட்சியமான திராவிடநாடு பெற, வழக்காடுவதில் வல்லவர்! நூல் பல கற்றவரும், ஏதும் கல்லாதவரும், தம் முன்னைய கொள்கையைப் புறக்கணித்துவிடும் மனமாற்றம் பெறும் அளவிற்கு, தம்மிசை மொழியால், அவர் அற்புதம் செய்து காட்டுவார். அவர் அருந் தம்பிமாருள், அவரை மிஞ்சும் வகையில், தம் இலட்சியத்திற்காகத் திறம்பட வாதிடுவோர்; அகச்சான்று புறச்சான்று பலப்பல எடுத்துக்காட்டி, தங்கள் கோட்பாட்டின் உயர்வை மெய்ப்பித்துவிடுவோர்.

ஆனால், சொல்லியவண்ணம் செயலாற்றுவரோ, அதற்கான நெஞ்சுரம் அவர்களிடம் மருந்துக்கும் உண்டா? பொன்னும் பொருளும் தேவைப்படின் குருதியும் ஆருயிரும் மனமுவந்து ஈந்திடும் பற்றற்ற உள்ளம் அவர்களில் ஒருவருக்காவது உண்டா, என, நமது தலைவர்களின் இயல்பும், இரத்தத்தில் ஊறிப்போய் இருக்கும் துணிவும், உள்ளத்தில் உறைந்து கிடக்கும் தியாகத் தன்மையும், உண்மையில் அறியாதோரும், அறிந்தும், அழுக்காறு காரணமாக அறியாதவர் போல் நடித்துக்கொண்டிருந்த அரசியல் சூதாடிகள், நமது உயர் கோட்பாட்டையும், அதன் இன்றியாமையமையைத் திராவிடர்களுக்கு விளக்க நாம் மேற்கொண்டு ஒழுகிய செயல் முறையையும், எண்ணி நகையாடினர்; நமக்கு எரிச்சல் தோன்றுமளவிற்கு இழித்துத் தூற்றினர்.

மாற்றுக் கருத்தினர் நம்மீது இடைவிடாது ஏவிய, கண்டனக் கணைகளையும், கேலிச் சொற்களையும், செவிதனக் கொள்ளாது 'எதையும் தாங்கும் இதயம் எமக்குண்டு' என மட்டும் கூறிவிட்டு, கொண்ட கருமமே கண்ணெனக் காரியமாற்றிவந்தோம். எதிர்ப்பாளர் சாற்றிய வசைமாரிகள், நமக்கு சோர்வையும் சலிப்பையும் அளிப்பதற்கு மாறாக, கொண்ட இலட்சியத்தில் உறுதிப்பாட்டையும், வழிபத்திலே போர்வெறியும் மூட்டிவிடத் துணைநின்றன. வசைவாளர்கள் எதிர்பார்த்ததற்கு மாறாக, நாம் நமது போக்கில் முன்னிலும் கூடுதலான தீவிரம் காட்டவே; மிகமிகக் கோபம் கொண்டனர் சிலர்; வேதனைபோடு வெம்பித் தலைகவிழ்ந்தனர் பலர்!

வருங்கால திராவிடர் சமுதாயத்தை இருட்டறையில் தள்ளி மூடும் கெடுமதியுடன், நரி சூழ்ச்சித் திறனும் மிக்க, ஆச்சாரியார் பெற்ற அதிகார பலத்தால், கல்லாமையைத் திணிக்கும் கொலைத் திட்டத்தை, புதிய கல்வித் திட்டமெனப் பொய் கூறி, திராவிடர் சமுதாயத்தின் தலையில் பெரும் பாரமாகச் சுமத்தினர்!

'வாய்ச் சொல் வீரர்' என நம்மைத் தூற்றித் திரிந்த அரசியல் தூர்த்தர்கள் அச்சம் கொள்ளவும் ஆயாசப்படத்தக்க நிலையிலும், திராவிடர் போர்க்கொடி உயர்த்தினர், பரணி பாடினர், புலியெனப் பாய்ந்தனர் அறப்போர்க் களம்!

நம்மரும் திராவிடத்தில் வடவர் ஆதிக்கம் வேர் விட்டிருக்கிறது என்பதை எடுத்துக்காட்டும் வகையில் இருந்து வந்த, டால்மியாபுரம் கல்லக்குடியாக மாற்றப்படவில்லை என்பதை — கண் மூடி திறப்பதற்குள்!

தி. மு. கழகத்தவர்கள் வாய்ச் சொல்லில் மட்டுமல்ல, செயலாற்றுவதிலும், தியாகம் புரிவதிலும், உயிரையும் காணிக்கையாகத் தரும் பெருநெறிவழி நிற்பவர்கள் என்ற உண்மையை அறப்போர்க் களத்திலே காட்டித்தான், அவமானம் அழிக்கப்பட்டு, அந்த இடத்தில் தன்மானக் 'கல்லக்குடி' எழுப்பப்பட்டது.

(4-ம் பக்கம் பார்க்க)

நம் நாடு
தி.மு.க.தின இதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை 15—7—54 வியாழன்

மண் குதிரையை நம்பி!

திரு—கொச்சி ஆட்சிபீடத்தில் உள்ளது, மக்கள் சோஷலிஸ்டு கட்சி. பத்தொன்பதே உறுப்பினர்களைக் கொண்ட அக்கட்சி, காங்கிரஸ் கட்சியின் ஒத்துழைப்பை நம்பி, ஆட்சிப் பொறுப்பை ஒப்புக் கொண்டது. இந்த ஒரு கட்டுறவே, அடிப்படை கோட்பாடுகளில், இரண்டு கட்சிக்கும் அதிக மாறுபாடு கிடையாது என்பதை ஒப்புக் கொள்வதாக உள்ளது.

மற்றத் துறைகளில் மாறுபாடு காணப்பட்டாலும் காணப்படாமற் போனாலும், திரு—கொச்சியில் உள்ள தமிழ் மக்களின் கோரிக்கையைக் கருவறுப்பதில் மட்டும், இரண்டு கட்சிக்கும் மாறுபாடு காணப்படுவதாகச் சொல்லுவதற்கில்லை. திரு—கொச்சி தமிழ்ப் பகுதிகள் சென்னை மாநிலத்தோடு இணைக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை ஒழித்துக்கட்ட வேண்டும் என்பதில், அங்குள்ள காங்கிரஸ் கட்சியும், மக்கள் சோஷலிஸ்டு கட்சியும் ஒரே கருத்துடையதாக இருந்து வருகின்றன.

தி-கொ. தமிழ்ப் பகுதிகள் சென்னையுடன் இணைந்துவிடுவதை, ஏற்கனவே அங்கு ஆட்சிப் பொறுப்பில் இருந்த காங்கிரஸ் கட்சி ஏற்றுக்கொள்ளவில்லை. தி-கொச்சியின் நெற்களஞ்சியம் எனச் சொல்லத்தகும் நாஞ்சில் தமிழ்ப் பகுதி, துண்டிக்கப்பட்டுவிட்டால், அங்கு உணவுப் பஞ்சம் ஏற்பட்டுவிடும் எனவும், தேவிகுளம், பீர்மேடு பகுதிகள் பிரிக்கப்பட்டுவிட்டால், அங்கு மின்சார வசதி குறைந்துவிடும் எனவும், காரணங்காட்டி, தி-கொ. தமிழ்ப் பகுதி, சென்னையுடன் இணைக்கப்படுவதை எதிர்த்து வந்திருக்கிறது காங்கிரஸ்!

தமிழ் நாடு காங்கிரசுடன் தன்னையும் இணைத்துக் கொள்ளும் தி. கொ. த. நா. காங்கிரசின் சாதாரண ஆரம்ப கோரிக்கையை திரு—கொச்சி காங்கிரஸ் கட்சியும், அகில இந்திய காங்கிரஸ் கட்சியும் ஏற்றுக்கொண்டு இருந்தால், முன்னர் இருந்த காங்கிரஸ் ஆட்சி கவிழ்ந்து போவதற்கு இடமே ஏற்பட்டு இருக்காது என்பதோடு, சிறுபான்மை உறுப்பினர்களைக் கொண்ட ம. சோ. கட்சியை ஆட்சி பீடத்தில் உட்கார வைத்துவிட்டு, அதன் வால் பிடித்துத் திரிய வேண்டிய கட்டாயமும், அங்குள்ள காங்கிரசுக்கு ஏற்பட்டு இருக்காது. நிற்க,

காங்கிரஸ் பின்னணி பலத்துடன் ஆட்சி பீடமேறியுள்ள ம. சோ. கட்சியும், அங்குள்ள தமிழர் கோரிக்கையை நிர்மூலமாக்குவதில் காங்கிரஸ் அடிச்சுவட்டைத்தானே பின்பற்றி வருகிறோம் என்ற நினைப்பில், தமிழர் கிளர்ச்சியை ஒடுக்கும் செயலை மேற்கொண்டு வருகிறது. காங்கிரஸ் கட்சியின் ஆதரவு எப்படியும் தமக்கு இருக்குமென்ற நம்பிக்கையில் அறப்போர் தொடுத்துள்ள தமிழர்மீது, தாராளமாகத் தாக்குதல் நடத்தியும் வருகிறது.

தி. கொ. தமிழ்ப் பகுதி சென்னையுடன் சேரக்கூடாது என்பதற்கு அங்குள்ள காங்கிரஸ், இதுவரை எந்தக் காரணங்களைக் கூறிவந்ததோ, அதே காரணங்களை முதல் மந்திரியான பட்டமும், இரண்டு தினங்களுக்கு முன் கூறினார் அதே கருத்தை மாநிலத் திருத்தக் குழுவிடமும், தம் கட்சியின் கருத்தெனக் கூறியும் உள்ளதாக அறிவித்திருக்கிறார்.

ஆனால், எதிர்பாராத வகையில, திரு-கொ. சட்ட சபையில், தேவிகுளம் சம்பந்தமாகக் கொண்டுவரப்பட்ட ஒத்திவைப்புப் பிரேரணையில், அங்கிருக்கும் தமிழ்ப் பகுதியில் உள்ள பெரும்பாலான தமிழ் மக்கள் பிரிந்து செல்ல விரும்பினால், தம் மாட்சி அவர்களைத் தடுக்காது என, திட்டவட்டமாக அறிவித்திருக்கிறார்.

திரு—கொச்சி தமிழ்ப் பகுதியில் உள்ள தமிழ் மக்களின் கருத்து, இத்துறையில், மூடுமந்திரமாக இப்பொழுது இருக்கவில்லை. திரு—கொச்சி த. நா. காங்கிரஸ் சார்பில நிறுத்தப்பட்ட அபேட்சகர்கள்தான் அதிகப்படியான வாக்குகள் பெற்று, அண்மையில் நடைபெற்றத் தேர்தலில் வெற்றிபெற்று இருக்கிறார்கள் திரு—கொச்சி தமிழ்ப் பகுதி சென்னையுடன் இணைவதில் தங்கள் முடிந்த முடிவு என்ன என்பதை, அத்தேர்தலில பெரும்பான்மையான தமிழர்கள், ஐயத்திற்கிடமின்றி, அறிவித்துவிட்டிருக்கிறார்கள் இத்தேர்தல் படிப்பினை சாதாரண அறிவினராலும் புரிந்து கொள்ளக்கூடியதாகும். அப்படி இருக்கும்பொழுது, மக்கள் சோஷலிஸ்டு கட்சி முதல் மந்திரியாக உள்ள பட்டமும் புரிந்துகொண்டு இருக்க வேண்டும் — புரிந்துகொண்டுதான் இருக்கிறார்!

நேர்மையில் நாட்டமும், நியாயத்தை நிலைநாட்டுவதில் அக்கரையும், மக்கள் முடிவை மதித்து நடப்பதில் கவலையும் கொண்டவராக பட்டம் இருப்பாரானால் என்ன செய்திருக்க வேண்டும்? திரு—கொச்சி தமிழ்ப் பகுதி, சென்னையோடு இணைக்கப்படுவதற்கு, தம்மிச்சையாக முன்வந்து, முயற்சித்திருக்க வேண்டும். அதில் வெற்றி காண டெல்லி ஏகாதிபத்தியத்திற்கு, அறிவுரை கூறி இருக்க வேண்டும்.

இந்த இரண்டையும் செய்வதற்குப் பதிலாக, மாநிலத் திருத்தக் குழுவிடம், தமிழ்ப் பகுதி சென்னையுடன் இணைவதற்கு எதிர்ப்புத் தெரிவித்திருக்கிறார், எதிர்ப்பு! என்ன நியாயம்? எங்கே அவர் பேச்சில் நாணயம் இருக்கிறது? நேர்மை, அவரைக் காணவும் வெட்கப்படுகிறது! நிற்க,

மக்கள் சோஷலிஸ்டு கட்சி, அரசியல் துறைக்கும் புதிது—அதைக் காட்டிலும் ஆட்சித் துறைக்கு மிக மிகப் புதிது!

முன்னர் ஆட்சிப் பொறுப்பில் இருந்த காங்கிரஸ் கட்சியின் அடிச்சுவட்டைப் பின்பற்றி, தமிழர் மீது தாக்குதல் நடத்தினால், காங்கிரசின் ஒத்துழைப்பு முன்னிலும் கூடுதலாக உரம் பெறுவதோடு, காங்கிரசின் 'சபாஷ்' பட்டமும் கிடைக்குமென பட்டம் எண்ணிக் கொண்டிருக்கிறார் போலும்!

மக்கள் சோஷலிஸ்டு கட்சி சர்க்காரின் போக்கு பிடிக்காமல், காங்கிரஸ் ஆதரவு காட்டப் பின்வாங்குகிறது என, ஒரு சோகச் செய்தி ஏற்கனவே வெளியாகி உள்ளது. இதை பட்டம் மறுத்திருக்கபோதிலும், காங்கிரஸ் மேலிடம், ம. சோ. க. ஆட்சிக்கு ஆதரவு காட்டுவது பற்றி திரு—கொச்சி காங்கிரசிற்கு நிபந்தனைகள் சில விதித்திருப்பதாக மீண்டும் செய்தி வந்திருந்தது.

ம. சோஷலிஸ்டு கட்சி உருவாக்கியுள்ள துண்டு விழும் வரவு—செலவு திட்டம்பற்றி, காங்கிரஸ் தலைவர் கோவிந்த மேனன் கூறியுள்ள கருத்து, திரு—கொச்சி சர்க்காருக்கு எதிர்காலத்தில் நேர இருக்கும் கதியை அறிவிப்பதாக இருக்கிறது. அதாவது, 'இவ்வளவு பெரிய துண்டு விழும் வரவு—செலவு திட்டத்திற்கு நாங்கள் ஆதரவு காட்டுவது என்பது எப்படி சாத்தியமாகும்?' என நிருபர்களிடம், அந்தக் காங்கிரஸ் தலைவர் கூறியுள்ளார்.

இது, எதைக் காட்டுகிறது? ம. சோ. க. ஆட்சியைக் கவிழ்க்க, இப்பொழுது ஆதரவு காட்டிவரும் காங்கிரஸ், ஏதோ, ஏற்கனவே சதித் திட்டம் தீட்டி வைத்திருக்கிறது என்ற உண்மையைத்தானே?

தேவிகுளத்தில், கிளர்ச்சி செய்யும் தமிழர்கள் மீது, மக்கள் சோஷலிஸ்டு கட்சி சர்க்கார் நடத்திவரும் தாக்குதலைக் காரணமாகக் கூறி, காங்கிரஸ் தனது ஆதரவை திரும்பப் பெற்றுக் கொண்டாலும், நாம் ஆச்சரியப்படமாட்டோம்.

எனவே, திரு — கொச்சியில் நடைபெற்று வரும் மக்கள் சோஷலிஸ்டு கட்சியின் ஆட்சி, மண் குதிரையை நம்பி ஆற்றில் இறங்கின கதையை மெய்ப்பித்துக் காட்டுவதாக இருக்கிறது.

மக்களின் முன்னேற்றத்திற்கு இன்றியமையாததாக உள்ளத் துறைகள் அனைத்திலும், தலைசிறந்ததாக உள்ள அரசியல் துறை, அதிகார வெறிகொண்டலையும் ஆஷாடபூதிகளால் கறைபடுத்தப்படுகிறது! அதன் பலனாகத்தானோ என்னவோ 'அரசியல் பிழைப்பற்றோர் புகலிடம்!' என்று பழிச்சொல் உலாவுகிறது போலும்!

செப்டம்பரில் நேரு பீகிங் செல்லலாம்!

இரங்கூன், ஜூலை 15—
இந்தியாவின் பிரதம மந்திரி நேரு, இந்தோனேஷியப் பிரதமர் அலிசாஸ்டி ரோமிட்ஜோஜோ பர்மியப் பிரதமர் யூ-நு ஆகிய மூவரும் செப்டம்பர் திங்களில் பீகிங் செல்வார்கள் என்று தெரிகிறது.

மூன்று பிரதமர்களையும் பீகிங் வருமாறு சூ-என்-லாய் அழைத்திருக்கிறாராம்!

இந்தி — கட்டாய பாடமாகிறது!

இந்தியைத் தாய்மொழியாகக் கொண்டில்லாத மாணவர்கள், இந்தியை முதல் மொழியாக எடுத்துப் படிக்காத மாணவர்கள் அனைவரும், இந்தியைக் கட்டாயமாக கற்க வேண்டுமென்று மத்திய பாரத் சர்க்கார் உத்திரவிட்டிருக்கிறது.

இந்த உத்திரவை ஒட்டி இந்த ஆண்டில் ஆறாம் வகுப்பில் இந்தி கட்டாய பாடமாக்கப்பட்டிருக்கிறது. அடுத்த இரண்டு ஆண்டுகளில், அடுத்த இரண்டு வகுப்புகளிலும் இந்திகட்டாய பாடமாக்கப்படும் என்று தெரிகிறது.

சமுதாயநலத் திட்டங்கள்

ஆந்திராவில் ஐந்தில் ஒருவர் பயனடைவர்!

ஆந்திராவில் தற்போது அமுலில் உள்ள — நிறைவேற்றப்படுகிற இரண்டு சமுதாய நல திட்டங்கள், இரண்டு சமுதாய அபிவிருத்தித் திட்டங்கள், 22-தேசிய விஸ்தரிப்புத் திட்டங்கள் இவைகளால் ஆந்திர மக்கள் எண்ணிக்கையில் ஐந்தில் ஒரு பகுதியினர்பயன்பெறுகின்றனர்

ஆந்திர மக்கள் 2 கோடி பேர்களில் ஐந்தில் ஒரு பகுதியினர் தற்போதைய திட்டங்களால் பயன் பெறுகின்றனர் என்று ஆந்திர ராஜ்ய அபிவிருத்திக் கமிஷனர் டாக்டர் நடராஜன் வானொலியில் பேசும்போது கூறினார்.

முதல் ஐந்தாண்டு திட்ட முடிவில் ஆந்திராவில் நான்கில் ஒரு பங்கு மக்கள் சமுதாய நலத் திட்டங்களால் பயன் அடைவார்களாம்.

இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தில் நிறைவேற்றப் போகும் திட்டங்கள் ஆந்திர மக்கள் அனைவருக்குமே பயன் தரும் என்று டாக்டர் நடராசன் கூறினார்.

இப்போது அமுலாகும் திட்டங்களுக்காக அடுத்த மூன்றாண்டுகளில் ரூ 87½ லட்சம் செலவிடப்படும் என்று அவர் மேலும் கூறினார்.

கல் வீசினர் — தடியடிபட்டனர்!

கல்கத்தாவின் கிழக்கு பகுதியில் உள்ள சணல் மில்லைச் சேர்ந்த 100 தொழிலாளர்கள் தங்கள் வேலை நேர விஷயமாக மில் நிர்வாகிகளோடு தகராறு கொண்டிருந்ததாகவும், பின்னர் மில்லின அலுவலகத்தைச் சுற்றி நின்றுகொண்டு உள்ளே இருந்த அதிகாரிகளை வெளியில் வராமல் அறைகளிலேயே இருக்கச்செய்து விட்டதாகவும், அதிகாரிகள் போலீசுக்கு தெரிவித்ததாகவும் தெரிகிறது போலீஸ் வந்ததும் அவர்கள்மீது கூட்டம் கல் வீசவே, போலீசார் தடியடிப் பிரயோகம் செய்தனர். 3 போலீஸ் உள்பட 20 பேர் காயமடைந்தனராம். 12 பேர் கைது செய்யப்பட்டனர் என்றும் தெரிகிறது.

"புண்ணிய க்ஷேத்திரம் போகாதீர்!"

பண்டித நேரு மீர்சாபூர் பொதுக்கூட்டமொன்றில் பேசுகையில், "எமது இந்தியாவில் ஏராளமான 'புண்ணிய யாத்திரை ஸ்தலங்கள்' இருக்கின்றன; ஆனால், இன்றைய இந்தியாவில் புதிய யாத்திரை தலங்களாக புதிதாய் எழுப்பப்பட்டு வரும் பெரும் நீர்த் தேக்கங்களும், அணைக்கட்டுகளுமாக நிறைய இருக்கின்றன; சிந்திரி உர உற்பத்திசாலை, பெங்களூர் ரசாயன ஆராய்ச்சிசாலை, பக்ரா—நங்கல் அணைக்கட்டு, ஹிராகுட் அணைக்கட்டு இவை போன்றவற்றை மக்கள், யாத்திரீகர்களாகச் சென்று பார்க்கவேண்டுமெனச் சிபார்சு செய்கிறேன்." என்று குறிப்பிட்டார்.

பாகிஸ்தானில் காகித உற்பத்தி!

ஏற்றுமதிக்கும் தயார்!

பாகிஸ்தான், மத்திய கிழக்கு நாடுகளுக்கு காகிதத்தை ஏற்றுமதி செய்ய முடியும் என்று அறிவிக்கப்படுகிறது.

இப்போது தினம் 50 முதல் 60 டன் வரை காகிதம் உற்பத்தி செய்யும் கர்னபூலி காகிதத் தொழிற்சாலையில் வரும் மாத முதல் தினம் 100 டன் வரை உற்பத்தியாகும் எனச் சொல்லப்படுகிறது.

தொழிற்சாலையில் உள்ள இயந்திரங்களும், இன்ன பிறவும் இங்கிலாந்து நிபுணர்களால் வெகுவாக முன்னேற்றப்பட்டிருக்கிறதாம். அதனாலேயே உற்பத்தி அதிகமாக இருக்கும் என்றும் தெரிகிறது.

1953 அக்டோபரில் தொடங்கிய அந்த காகிதத் தொழிற்சாலை இதுவரை ஒரு கோடி 25 லட்சம் ரூபாய் பெறுமான 8,000 டன் காகிதத்தை உற்பத்தி செய்துள்ளதாகத் தெரிகிறது. அகில உலகச் சந்தைகள் ஜகார்த்தாவிலும், டமாஸ்கஸ் நாட்டிலும் நடைபெறும்போது பாகிஸ்தான் காகிதங்களை விளம்பரம் செய்யப்போகிறார்களாம். ஏற்கனவே, மத்திய கிழக்கு நாடுகளிலும், இந்தோனேஷியாவிலும் பாக். காகிதங்களுக்கு கொழுத்த மார்க்கெட் கிடைத்து வருகிறதாம்.

பாக். நாட்டிற்கு ஒரு வருடத்திற்குத் தேவையானது, 'நியூஸ் பிரிண்ட்' உள்பட 23 ஆயிரம் முதல் 25 ஆயிரம் டன் வரைதான் கர்னபூலியில் முழு உற்பத்தியில் ஈடுபட்டால் 5 முதல் 7 ஆயிரம் டன்கள் வரை ஏற்றுமதிக்காக மிச்சப்படக் கூடும் என்று தெரிகிறது.

நெசவாளர் துயர் — முதலமைச்சரிடம் மகஜர்!

தமிழ் நாடு கைத்தறி நெசவாளர் காங்கிரஸ் பொதுக்காரியதரிசி டாக்டர் கே.எஸ். கோபால்சாமியும், டி. சீனிவாசனும் முதல் மந்திரி காமராசரைப் பேட்டி கண்டு கூட்டுறவு சங்கத்தில் சேராத நெசவாளருக்கு நிவாரணமளிக்குமாறு ஒரு மனு சமர்ப்பித்தனர். மாநிலத்தில் உள்ள 5 லட்சம் நெசவாளர்களில் ஒரு லட்சம் நெசவாளர்கள்தான் உதவி பெறுகின்றனர் என்றும், நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் சேர்ந்திருந்தாலும், சேராமலிருந்தாலும் அவர்களுக்கு உதவி கிடைக்குமாறு இந்திய சர்க்காரை மாநில சர்க்கார் வற்புறுத்த வேண்டும் என்றும் கூறினர்.

வருமானத்தை பறிப்பது 'வஞ்சனை'யாகும்?

விற்பனை வரியானது மாநில சர்க்காரிடமே இருக்க வேண்டும் என்று வரி விசாரணைக் கமிஷன் கருதுகிறது. அதை மத்திய சர்க்காருக்கு மாற்ற வேண்டும் என பல ஸ்தாபனங்கள் யோசனை தெரிவித்ததை நிராகரித்துவிட்டது. மாநில சர்க்காருக்கு உள்ள வருமான வழி விற்பனை வரிதான் என்றும், அதைப் பறிப்பது நியாயமல்லவென்றும் கமிஷன் கருதுவதாகத் தெரிகிறது.

கருணையுள்ள 'கண்ணியவான்'கள்!

கள்ளத்தோணியாகக் குடியேறியதாக தலைமன்னார் முகாமில் 75 பேர்கள் காவலில் 3 மாத காலமாக வைக்கப்பட்டுள்ளனராம். இவர்கள் மனிதர்களாகக் கருதப்படவில்லையாம்!

எழுந்திருக்கவும், நடமாடவும் முடியாத நிலையிலிருக்கும் அவர்களுக்கு தினசரி காலை ஆகாரமாக ஒரு பன் ரொட்டியும், மத்தியானம் தேநீரும் மட்டும்தான் கொடுக்கப்படுகிறதாம்!

சித்தூர் மாவட்ட தி. மு. கழக மாநாடுகள்

நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்

10. 11—7—54-ந் தேதிகளில் நகரட் டேர்பேட்டையில், சித்தூர் மாவட்ட தி. மு. கழக சமூக சீர்திருத்த, அரசியல் மாநாடுகள் முறையே தோழர்கள் அ. பொன்னம்பலனார் தலைமையிலும், ஏ எஸ். சி. கிருட்டிணசாமி தலைமையிலும் நடைபெற்றபோது நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களின் விவரம் இங்கே தரப்பட்டுள்ளது :—

அனுதாபம்

சென்ற ஆண்டு ஜூலை திங்களில் நடைபெற்ற மும்முனைப் போராட்டத்தில் கலந்து கொண்டு, அரசியலாரின் அடக்குமுறைக்கு—துப்பாக்கி வேட்டு கொடுமைகளுக்குப் பலியாகி உயிர் நீத்த இலட்சியவீரர்களுக்கு இம்மாநாடு தனது பணிவன்பான வீர வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்வதுடன், உயிர் நீத்த வீரர்களின் குடும்பத்தாருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறது.

—தலைவர்

* * *

கடந்த 15 ஆண்டுகளாக சித்தூர் தமிழ் மக்களுக்காக அரும்பாடுபட்டு மாரடைப்பால் மரணமடைந்த ஆசிரியர் மங்கலங்கிழார் குடும்பத்திற்கு இம்மாநாடு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறது.

—தலைவர்

★

சித்தூர் தமிழ்ப் பகுதி பிரச்சினை

(அ) சித்தூர் பிரச்சினை சம்பந்தமாக வீணான மனமாச்சரியங்களும், தமிழர்—ஆந்திரர் குரோத உணர்ச்சியும் மூளாத வகையில் மொழிவழி அரசு கோட்பாட்டுக்கு மதிப்பளித்து ஒரு சமரசம் காண, சென்னை சர்க்கார் முதலமைச்சர் காமராசர் அவர்களும், ஆந்திர சர்க்கார் முதலமைச்சர் பிரகாசம் அவர்களும் சந்தித்துப் பேச வேண்டும் என்று இம்மாநாடு வற்புறுத்திக் கேட்டுக்கொள்ளுகிறது.

(ஆ) தமிழர்—ஆந்திரர் பிரச்சினையை நியாயமான முறையில் தீர்த்துவைக்கும் வகையில், எல்லைக் கமிஷனை, காலங்கடத்தாமல் டெல்லி சர்க்கார் அனுப்பிவைக்க வேண்டுமென்று இம்மாநாடு வலியுறுத்துவதுடன், மேற்படி கமிஷனை, அனுப்புவதில் தாமதம் ஏற்படுவதுதான் வீணான தமிழர்—ஆந்திரர் துவேஷத்தை வளர்க்கிறது என்பதை வருத்தத்துடன் டெல்லி ஆட்சி பீடத்தினருக்கு இம்மாநாடு அறிவுறுத்திக் கூறுகிறது.

(இ) சித்தூர் மாவட்டத்தின் தமிழ்ப் பகுதிகளை ஆந்திர நாட்டுடன் பிரிவினையின்போது, ஆந்திர அரசினருக்கு உரிமையாக்கும் வகையில், டெல்லி ஆட்சி பீடத்தினர் செய்த சூழ்ச்சியை—இதனால் ஒன்றுபட்ட ஆந்திர நாட்டு மக்களுக்கும் தமிழக மக்களுக்கும் இடையே வேண்டுமென்றே வீண் குழப்பத்தை உண்டாக்கி வைத்திருக்கும் அந்நிலை, அரசியல் தெரியாத் தன்மையை இம்மாநாடு மிக வன்மையாகக் கண்டிப்பதுடன் சித்தூர் மாவட்ட தமிழ்ப் பகுதிகள் அனைத்தும் தமிழகத்தோடு சேர்க்கப்படவேண்டும் என்பதற்காகவும், அதற்கு ஆவன செய்யவும் திருச்சி பொதுக் குழுவில் தோழர் என். வி நடராசன் அவர்கள் தலைமையில் நியமிக்கப்பட்டுள்ள தனிக் குழுவை இம்மாநாடு முழு மனதோடு வரவேற்பதுடன, அத்திட்டம் வெற்றிபெற சித்தூர் மாவட்டத்திலுள்ள கிளைக் கழகங்கள் அனைத்தும் தீவிர பணியில் ஈடுபடவும் தயாராயிருக்கிறது என்பதை பொதுக் குழுவிற்கும், பொதுச் செயலாளருக்கும் பணிவன்புடன் தெரிவித்துக் கொள்கிறது.

—கே. ஏ. மதியழகன்
—நாகர்கோயில் வி. எம். ஜான்
—சித்தூர் என். கேசவன்

★

திரு—கொச்சி பிரச்சினை

(அ) திரு-கொச்சியில் வாழும் 15 லட்சம் தமிழ் மக்கள், மொழி அடிப்படையில் தாய் தமிழகத்தோடு சேர வேண்டுமென்ற கிளர்ச்சியை இம்மாநாடு வரவேற்று ஆதரிக்கிறது.

(ஆ) மொழி அடிப்படையில் தாயகத்தோடு சேர வேண்டுமென்று அங்கு கிளர்ச்சி செய்யும் (திரு—கொச்சி) தமிழ் மக்களை திரு—கொச்சி, பிரஜா-சோஷலிஸ்டு கட்சி சர்க்கார் தனது கொடுமை மிக்க அடக்குமுறையால் தொல்லைப்படுத்தும் அந்நிலை இம்மாநாடு வன்மையாகக் கண்டிக்கிறது.

திரு—கொச்சி ‘தமிழ்நாடு’ காங்கிரஸ் தலைவர்களான ஏ. நேசமணி எம். பி., ஏ. அ. ராஜாக் எம். பி, ஏ சிதம்பரநாதன் எம் எல். ஏ., (முன்னாள் அமைச்சர்) ஆகியோரையும் சிறைப்பட்டுள்ள இதர தோழர்களையும் சிறையிலிருந்து விடுவித்து தடையுத்தரவுகளை ரத்து செய்ய வேண்டுமென்று இம்மாநாடு வலியுறுத்திக் கூறுகிறது

—நாகர்கோயில் வி எம். ஜான்
அ பொன்னம்பலனார்

★

கைத்தறி நெசவாளர் பிரச்சினை

நம் நாட்டு கைத்தறி நெசவுத் தொழிலாளர் பிரச்சினை குறித்து அரசினருக்கு தி. மு கழகமும் அதன் பொதுச் செயலாளரும் பலமுறை ஆவன கூறியும் கவலைகொள்ளாமல், அத்தொழிலில் ஈடுபட்டுள்ள பாட்டாளி மக்களை மேலும் தொல்லைக் காழ்த்தும் கொடுமையை வன்மையாகக் கண்டிப்பதுடன், நம் நாட்டு நெசவாளர் பிரச்சினை நிரந்தரமான நல்ல வகையில் தீர்ப்பதற்காக—குறிப்பிட்ட காலம் வரையிலாவது அந்நிய நாட்டிலிருந்தும், வடநாட்டிலிருந்தும் இறக்குமதியாகும் நூலிழையைத் தடுத்து தங்களது பாதுகாப்பையும் தர சென்னை—ஆந்திர அரசினர் ஆவன செய்ய வேண்டுமென்று வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறது.

—என் ஏ ரஷீத்
—வி. முனுசாமி

★

கல்வித் திட்ட ஒழிப்பு

சென்னை முன்னாள் முதல் அமைச்சர் தோழர் ஆச்சாரியாரால் கொண்டுவரப்பட்டதும் கடந்த 10 மாத காலமாக திராவிட சமுதாயத்தின் எதிர்காலத்தையே சிதைவுறவைக்கக்கூடிய அநீதிகள் தலைவிரித்தாடச் செய்து வந்ததுமான சர்வாதிகார—வர்ணாசிரம குலக் கல்வி திட்டத்தை, மக்களின் மகத்தான எண்ணத்தையும், முற்போக்கு சக்திகளின் எதிர்ப்பையும், பொதுவாக ஜனநாயகத்தையும் மதித்து—ரத்து செய்த முதலமைச்சர் காமராசர் அவர்களையும், பொதுவாக அந்நிய திட்டம் ஒழிக்கப்படுவதற்கு தி மு. கழக அறப்போருடன் ஒத்துழைத்த அனைவரையும் இம்மாநாடு பாராட்டுவதுடன், அதே போன்று ஆந்திர நாட்டிலும் அந்நிய திட்டத்தைக் கைவிட்ட ஆந்திர அரசினருக்கும் இம்மாநாடு தனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது.

—சி. பி சிற்றரசு
—கே எம். கண்ணபிரான்

★

பிரெஞ்சிந்தியப் பிரச்சினை

(அ) பிரெஞ்சிந்தியப் பகுதிகளில் நடைபெறும் உரிமைப் போராட்டத்தை இம்மாநாடு மிகவும் வரவேற்பதுடன், குறிப்பாக புதுவை காரையில் திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்கள் அந்த அறப்போரில் கலந்துகொண்டு பணியாற்றுவதைக் கண்டு இம்மாநாடு மகிழ்ச்சியடைகிறது; அவ்வீரர்களின் தொண்டினை பாராட்டுகிறது.

(ஆ) பிரெஞ்சிந்திய விடுதலைப் பிரச்சினையில் டெல்லி சர்க்கார் தக்க நடவடிக்கை எடுக்காமல் காலங் கடத்துவதைக் குறித்து இம்மாநாடு டெல்லி அரசினரின் போக்கைக் கண்டிக்கிறது.

—சத்தியவாணிமுத்து
—வி. ராமசாமி

★

இலங்கை பிரச்னை

இலங்கை வாழ் திராவிடர்களை இலங்கை அரசினர் படுத்திவரும் கொடுமையைக் குறித்து திராவிட முன்னேற்றக் கழகம் இதுவரை எடுத்துக்காட்டியுள்ள வழிவகைகளை செயலாற்ற தவறிய டெல்லி ஆட்சி பீடத்தினரின் இம்மாநாடு வன்மையாகக் கண்டிப்பதுடன், சென்னை அரசியலாரும், சட்ட மன்ற உறுப்பினர்களும் உடனடியாக தக்க நடவடிக்கை எடுக்குமாறு டெல்லி சர்க்காரை வற்புறுத்தவேணுமாய் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது.

—என். வி. நடராசன்
—ஏ. முனுசாமி

விதவை கண்ணீர் துடைக்க முயற்சி

புளியம்பட்டி செங்குந்த முக்கியஸ்தர் கூட்ட முடிவு

“செங்குந்தர் சமூகத்தில் 14 கிராமத்தார்கள் நாட்டுக் கூட்டம் என்ற பெயரால் தங்கள் கிராமமாகிய எட்டையபுரத்தில் 21—6—54ல் நடைபெற்றது. இதற்கு முன் மேற்படி கூட்டம் 20 வருடங்களுக்கு முன்பு நடைபெற்றது. தற்போது நடந்த கூட்டத்தில் விதவைகளின் கண்ணீரைத் துடைத்த நாட்டாருக்கு வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்,” என புளியம்பட்டி அருப்புக்கோட்டை மறுமண ஆதரவு சங்கக் காரியதரிசி சு. நடராஜன் எழுதுகிறார்.

மேற்படி கிராமத்தார்கள் செய்த தீர்மானங்கள் :—

1. ஒரு குடும்பத்தில் ஆண்வாரிசு இல்லாமல் பெண் வாரிசு மட்டும் இருந்தால் குடும்பத்திலுள்ள சொத்துக்கள் பெண் வாரிசுக்கு பாத்தியப்பட்டது.

2. ஒரு குடும்பத்தில் ஆண், பெண் வாரிசு இல்லாமல் கணவன் இறந்தபின் அவருடைய மனைவி தன் கணவனின் சகல சொத்துக்களையும் தானே அடைந்து, ஜீவனம்சத்திற்கு வழியில்லாமல் அச்சொத்துக்களை விற்று ஜீவனம் செய்யலாம்.

3. இளம் விதவைகள் தனக்குரிய சொத்துக்களை அடைந்து மறுவிவாகம் செய்து கொண்டாலும் மூந்திய சொத்துக்கள் அப்பெண்ணையே சாரும். தாயாதிகாரர்கள் கோர்ட்டுக்குப் போனால் நாட்டார் அவர்களுக்கு சேவை உண்டு.

4 சகல தீர்ப்புகள் செய்து விதவை கலியாணம் செய்யும்படி நாட்டார் தீர்மானிக்கப்பட்டது சகல சட்டதிட்டங்களுக்கும் உட்பட்டு விதவை கல்யாணம் செய்துகொள்ள நாட்டார்கள் தீர்மானித்தார்கள்.

திருச்சி மாவட்ட தாழ்த்தப்பட்டோர் சம்மேளன கமிட்டி கூட்டம்

6—7—54 அன்று திருச்சி வாகனேரி பெல்ஷனர் தெரு மாரியம்மன் கோவில் மண்டபத்தில் திருச்சி மாவட்ட தாழ்த்தப்பட்டோர் சம்மேளனக் கமிட்டிக் கூட்டம் தோழர் பி. வெயிச்சை தலைமையில் நடைபெற்றபோது, அண்மையில் வரும் ஜில்லா போர்டு தேர்தலுக்கு தாழ்த்தப்பட்டோர் சம்மேளனத்தின் சார்பாக நிற்பவர்கள், பொதுக் காரியதரிசி, தாழ்த்தப்பட்டோர் சம்மேளனம், நெ. 5, டோல் கேட், திருச்சி என்ற முகவரிக்கு ஜூலை 25க்குள் மனு செய்து கொள்ளவேண்டுமென்றும், மனுக்களை பரிசீலனை செய்ய அட்ஹாக் கமிட்டி ஒன்று நியமிக்கப்படும், புதிய கல்வித் திட்டத்தை ஒழித்த காமராசரைப் பாராட்டியும் முடிவுகள் செய்யப்பட்டது.

இலவச இரவுக் கல்வி இல்லம்

16—6—54 மாலை 7 மணிக்கு, 6, 7, 8 வகுப்பு மாணவர்களுக்காக இலவச இரவுக் கல்வி இல்லம் ஒன்றை ஐனுப் பொ. ஐ, மு. மக்கீர் முகமது துவக்கிவைத்து அதன் அவசியத்தை விளக்கிப் பேசினார். பி எம். தாஜுதீன் கல்வி இல்லத்தை நடத்துபவர்களின் முயற்சியைப் பாராட்டிப் பேசினார்.

திருவள்ளுவர் படிப்பகத் திறப்பு விழா

எண்ணமநாயக்கனூர், ஜூலை 8— 30—6—54 காலை படிப்பகத் திறப்பு விழா நடைபெற்றபோது, கீர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர் : செயலாளர்: நடராசன்; துணைச் செயலாளர்: ராமசாமி; பொருளாளர்: மாரியப்பன்; மற்றும் 12 செயற்குழு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

பகுத்தறிவு பரவ இம்மாதிரி படிப்பகங்கள் ஒவ்வொரு கிராமத்திலும் ஆரம்பித்து மக்களுக்கு விழிப்புணர்ச்சியை உண்டு பண்ண வேண்டுமென பல தோழர்கள் பேசினர்.

திராவிட முற்போக்கு மன்றம்

மதுரை மாவட்டம் சித்தாமணி கிராமத்தில் 4—7—54 மாலை 4 மணியளவில் தோழர் எஸ். மாரியப்பன் அவர்கள் தலைமையில் திராவிட முற்போக்கு மன்ற துவக்க விழா தோழர் கே. பி: பாண்டியன் தி. மு. கழகக் கொடியை யேற்றிவைத்தார். தோழர் கோ. அழகிரி திறப்பு விழா விரிவுரை யாற்றினார்கள். சிறுவர்களுக்கு இனிப்பு வழங்கப்பட்டது.

மணமேடு மறுமலர்ச்சி படிப்பகம்

2—7—54ல், தோழர் சி. பி. சிற்றரசு மேற்படி படிப்பகத்தை திறந்து வைத்து விரிவுரையாற்றினார். ‘நீச்சல்’ வளர்ச்சி நிதிக்காக ரூ 1 அன்பளிக்கப்பட்டது.

‘ஆரிய நாட்டினர்’ என்ற பாரதியார் பாட்டின் வரிகளை நீக்க வேண்டும்!

தமிழாசிரியர் கடமைபற்றி டாக்டர் சிதம்பரநாதனார்

சிதம்பரத்தில் நடைபெற்ற சென்னை மாநிலத் தமிழாசிரியர் இரண்டாவது மாநாட்டில் வரவேற்புக் குழுத் தலைவர் டாக்டர் அ. சிதம்பரநாதனார் வரவேற்புரையின் முதற்பகுதி சென்ற இதழில் வெளிவந்துள்ளது அதன் பிற்பகுதி இங்கே தரப்பட்டுள்ளது:

நம் நாட்டிலே சில கல்லூரி மேடைகளிலேயும், உயர்தரப் பள்ளிக்கூட மேடைகளிலேயும் “வாழிய செந்தமிழ் வாழ்க நற்றமிழர்” என்ற பாரதியார் பாட்டினைப் பாடுதற்குப் பலர் ஏற்பாடு செய்கிறார்கள்.

அக்கோலங்களிலே அப்பாடலில் வருகின்ற “ஆரிய நாட்டினர் ஆண்மையோடு இயற்றும் சீரிய முயற்சிகள் சிறந்து மிக் கோங்குக” என்று வருகின்றது அக்காரணத்தால், அப்பாடலை அவ்வண்ணம் பாடுதற்கும் தாளாமல் இருக்கின்ற தமிழ் ஆசிரியர்களும், மாணவர்களும் உண்டு என்பதை அறிவேன். இவ்வாறு மாணவரும் ஆசிரியரும் இருப்பாரேயாயின், அது காரணமாக அவர்களை நாத்திகர்கள் என்றோ, தேசத் துரோகிகள் என்றோ கூறிவிடுதல் பொருந்தாது.

ஆரிய நாட்டினர் என்ற இச்சப் பாட்டிலே வருகின்ற பகுதி பாரத நாட்டினர் என்று பொருள்படும். அதனுள் இந்தியா தேசத்தினர் செய்யும் முயற்சிகள் ஓங்குக என்று பொருள் கொள்ளக்கூடிய வகையில் பாட்டு அமைகின்றது என்று சிலர் சொல்லுதல் இயலும்.

ஆயினும், இந்தப் பாட்டினைப் பாடிய கவிஞர் சுப்பிரமணிய பாரதியாரே, தமிழ் மொழியிலே ஆரியத்தினின்று வேறுபடுத்தி ஆரியத்துக்குச் சமமாகத் தமிழ்த் தாய் வாழ்ந்தாள் என்றுவது இன்னொரு பாடலில் கூறியுள்ள காரணத்தாலேயே ஆரிய மொழி வேறு தமிழ் மொழி வேறு என்று கருத்துடையவர் அவர் என்பது அறியப்படும். தமிழ்த்தாய் கூற்றாக அவர் அமைத்திருக்கின்ற ஒரு பாடலிலே “ஆன்ற மொழிகளினுள்ளே—உயர் ஆரியத்துக்கு நிகர் என வாழ்ந்தேன்” என்று அமைத்துப் பாடி இருக்கின்றார். ஆனதால் வடமொழி வேறு, தமிழ் மொழி வேறு என அவர் மதித்தார் என்பது அறியப்படும்.

இதனால், அறிவும் சாதுரியமும் வாய்ந்த கூட்டம் அமைப்பாளர்கள் செய்ய வேண்டிய பணி யாதெனின், “வாழிய செந்தமிழ்” என்ற பாட்டைப் பாட ஏற்பாடு செய்யும்பொழுது ‘ஆரிய நாட்டினர்’ முதலாவதாக வருகின்ற அடிகளை பிரித்துப் பாட ஏற்பாடு செய்ய வேண்டும் என்பதே ஆயினும், இப்பாடலை உள்ளபடியே ஒரு மேடையிலே ஒருவர் பாடிவிட்டால் அந்தக் கூட்டத்தில் உடனே குழப்பத்தை விளைவிக்க விடாமல் தலைமை ஆசிரியரையோ, கூட்ட அமைப்பாளரையோ பிறகு கண்டு இவ்வாறு இதைச் செய்யலாகாது என்று எடுத்துச் சொல்லி, அவ்வண்ணம் மேற்கொண்டு செய்யாமல் பாதுகாத்துக் கொள்வதே தமிழாசிரியர் பொறுப்பும் கடமையும் ஆகும் அன்றி, அப்பாட்டையே பாடுவதற்கு ஏற்பாடு செய்யாமல்

‘வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ் மொழி, வாழிய வாழியவே’ என்ற தொடக்கத்திலே பாரதியார் பாடியுள்ள தமிழ் மொழி வாழ்த்தினைப் பாட ஏற்பாடு செய்வது இன்னும் விரும்பத் தக்கதாகும்.

பொருள் மதிக்கப்படுவது மக்களின் மனப்பண்பைப் பொறுத்தது!

எனவே மக்கள் மனதைப் பண்படுத்தப் பாடுபட வேண்டும்

பொதட்டூர்பேட்டை சமூக சீர்திருத்த மாநாட்டில் கே. ஆர். ராமசாமி திறப்புரை

"ஒரு காலத்திலே நானும் பழமைப் பிடிப்பில் சிக்கி பரம பக்தனாக இருந்தவன்தான்; அந்தக் காலங்களிலே, நான், நாடகத்தில் நடிக்கும்பொழுது மட்டுமின்றி நாடக வேஷத்தைக் கலைத்த பின்னுங்கூட குங்குமப் பொட்டு அணிவது வழக்கம்; ஒரு நாள் நாடகத்தில் நடித்து முடிந்ததும், என் நெற்றியிலிருந்த குங்குமப் பொட்டை அண்ணா அவர்கள் அழித்தார்கள். அன்றையிலிருந்து என் மனம் எப்படியோ இருந்தது; அன்றைய எனது சிந்தனை, அண்ணா அவர்களால் தூண்டப்பட்டதிலிருந்து பகுத்தறிவுவாதியாக மாற்றப்பட்டேன். இதை ஏன் நான் இங்கே குறிப்பிடுகிறேன் என்றால், நான் பகுத்தறிவு பெற்ற நாள் முதல் பிறரையும் பகுத்தறிவுப் பாதைக்கு இழுத்துச் செல்கிற பணியினை என்னால் இயன்ற வரை செய்ய வேண்டும் என்ற எண்ணம் என் உள்ளத்திலே தோன்றி வந்திருக்கின்றது; நடிகர்களென்றாலே, இந்த சமுதாயத்திலேயே வெறுத்தொதுக்கப்படுகிற நிலைமையை மாற்றி, நடிகனும் சமுதாயத்திலே ஒரு அங்கம்—அவனுக்கும் மற்றெல்லோரையும் போலவே எவ்வகையான பணிபுரியும் தகுதி உண்டு என்ற நிலையை உண்டாக்கித் தந்த பெருமை அண்ணாவைச் சாரும். அதற்காக அவருக்கு நடிகர்களின் சார்பிலே நன்றி கூறிக்கொள்கின்றேன்,"

என்று, 10—7—54-ல், பொதட்டூர்பேட்டையில் நடைபெற்ற சித்தூர் மாவட்ட சமூக சீர்திருத்த மாநாட்டில், திறப்புரையாற்றுகையில், தோழர் கே. ஆர். ராமசாமி அவர்கள் குறிப்பிட்டார். அவர் தொடர்ந்து பேசியதாவது:—

சித்தூர் மாவட்ட தி. மு. கழக சமூக சீர்திருத்த மாநாட்டைத் திறந்து வைக்குமாறு என்னைப் பணித்த நண்பர்களுக்கு நன்றி கூறிக் கொள்கிறேன். நான் ஒரு நடிகன் என்பது நாடறிந்தது; நடிகனுக்கு சமூகப் பணிபுரியும் வேலை சரிதானா? எனப் பலர் கேட்கின்றனர். அவர்களுக்குச் சொல்லுகிறேன்—இந்த சமூக சீர்திருத்த மாநாட்டைத் திறந்து வைக்குமாறு நான் பணிக்கப்பட்டதை சமூகத்திற்கு பணிபுரிய நான் தகுதியுடையவன் தான்; என்னைப்போன்ற நடிகர்களும் தகுதியுடையவர்கள் என்பதை எடுத்துக்காட்டவில்லையா?

எனக்கு சமுதாய சீர்திருத்தம் குறித்து வெகு விளக்கமாகச் சொல்லத் தெரியாவிட்டாலும், இந்த சமுதாயத்தின் சீர்கேடுகளை நானும் உணருகிறேன் என்கிற காரணத்தினால், தெரிந்தவற்றை மட்டும் கூறுகிறேன்.

மராட்டிய மண்டலாதிபதி சிவாஜி தன்னுடன் இருந்த துக்காராம் என்பவருக்குத் தங்கத் தாம்பாளத்தில் நவரத்தினங்களையும், சிவப்புக் கல், முத்து, நல்முத்து, பச்சைக் கல் இவை போன்றவையும் தந்தானாம்;

அத்தனையையும் எடுத்துக் கொண்டு சென்று, துக்காராம், தன் மனைவியினிடம் தந்தானாம்; மனைவி மட்டற்ற மகிழ்வெய்தி சிவப்புக் கல்லை எடுத்துக் கையில் வைத்துக் கொண்டு, 'பார்த்தீர்களா, எத்தனை அழகாக இருக்கின்றது,' என்று கேட்டாளாம்.

துக்காராமோ, 'இந்த சிவப்புக்கல், ஏழை சிந்தும் இரத்தத்தை நினைவுபடுத்துகிறது;' என்று சொன்னானாம்,

பிறகு, மனைவி, முத்து ஒன்றை எடுத்துக்கொண்டு 'இதனழகு எப்படி?' என்றாளாம்.

துக்காராமோ, 'ஏழையின் கன்னத்திலே வழியும் கண்ணீர்த் துளியை நினைவுபடுத்துகின்றது இம்முத்து,' என்றானாம்!

உடனே மனைவி, 'அது சரி; இதோ இந்த நல்முத்து எப்படி?' என்றாளாம்!

துக்காராம் 'குஷ்ட ரோகி ஒருவனின் தேகத்திலே நீர் கோர்த்து நிற்கும் வெண்மை புண் போன்றிருக்கின்றது, இந்த நல் முத்து!' என்று பதில் சொன்னானாம்.

'இந்த பச்சைக் கல், பார்ப்பதற்கு மிக அழகாக இல்லையா?' என்று, மீண்டும் கேட்டாளாம் அவன் மனைவி.

'சிறு குழந்தை ஒன்றின் சமாதியின் மேல் முளைக்கும் புல் போன்றிருக்கிறது, இந்தப் பச்சைக் கல்!' என்றானாம் துக்காராம்.

இந்தப் பழங் கதையை நான் கூறுவதன் காரணம் ஒரு பொருள் மதிப்பிடப்படுவது மனிதனின் மனப்பண்பைப் பொறுத்திருக்கிறது; எனவே, மனித சமுதாயத்தின் மனம் உள்ளம் காலத்திற்கேற்ற முறையில் பண்படுத்தப்பட்டிருந்தாலன்றி அந்தச் சமுதாயம் சிறந்த ஒரு சமுதாயமெனக் கொள்ள முடியாது.

ஆகவேதான், 'திராவிடர் சமுதாயத்தின் சீர்கெட்ட நிலையைப் போக்கி சீர்பெறச் செய்ய மக்கள் மனம் பண்படுத்தப்பட வேண்டும்' என்று தி. மு. கழகம் கருதுகிறது. அதனால்தான் விடாது தொடர்ந்து சமூக சீர்திருத்த மாநாடுகளைக் கூட்டி மக்களுக்கு நல்ல முன்னேற்றக் கருத்துக்களைத் தரவும், மக்களின் மனதைக் கப்பிக்கொண்டிருக்கிற பழமை மூட எண்ணங்களைக் களையவும் முற்பட்டிருக்கிறது."

ஜூலை 15—வாழ்கிலோர்...

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

நாவடக்கமின்றி, திராவிடரை பழித்துக் கூறும் இயல்பு கொண்ட பண்டிதரின் இழுமைப்பு தொலைக, தமிழ் நாட்டின் கண் ஓடும் புகைவண்டிகள் அனைத்தும், அந்தப் புனித நாளாம் ஜூலை 15-ல் நிறுத்தப்பட்டது. பொதுச் செயலாளர் ஆணையிட்டால், பூரிப்புடன் களம்புக ஆயிரம் ஆயிரம் திராவிட இளங்காளையர் முழக்கொலிவுடன் களம் புகுவர் என்ற மகத்தான உண்மை, அன்றுதான் உலகத்தவருக்கும் உணர்த்தப்பட்டது; நமது பலம் தெரியாது இருந்த நமக்கும் அறிவிக்கப்பட்டது.

அப் பொன்னாளைக் காண திராவிடர்தம் ஆருயிரை அறப் போர்க்களத்தில் அர்ப்பணித்துள்ளனர்! விரல், கரம், கால் எனப் பலராகல், பாதுகாப்புப் படையினர் ஏவிய அம்பாக்கிக் குண்டுகள் கேட்ட காணிக்கைகளைத் தந்துள்ளனர்!

ஜூலை 15!—திராவிட மாவீரர்கள் கொட்டிய குருதியில் சிவப்பேறி விட்டிருக்கிறது!

அந்த அளவிற்கு திராவிடத்தைப் பற்றிக்கொண்டிருக்கிற ஆரிய—வடவர் ஏகாதிபத்திய இருள் மாறி இருக்கிறது! கரையின் பரப்பு குறுகி இருக்கிறது!!

மங்கிக்கிடந்த திராவிட வீரத்தை மீண்டும் ஒளி வீசிடச் செய்த, களத்திலே பிணமான மாவீரர்களுக்கும், அங்கம் பழுதாக்கப்பட்ட அஞ்சாநெஞ்சர்களுக்கும், தடியடியைத் தாங்கிக்கொண்ட செயல் வீரர்களுக்கும், சிறையை திராவிட விடுதலைப் பயிற்சிக்கூடமாக அமைத்துக்கொண்ட ஆற்றல் படைத்தவர்களுக்கும் நாம் வீர வணக்கமும், வாழ்த்தும் கூறுகிறோம், அதே ஜூலை 15-ம் நாளில்!

ஒரு கடிதம்

இன்று பரிசீலனை

திருவனந்தபுரம், ஜூலை 15— திருவாங்கூர் தமிழ் நாடு காங்கிரஸ் தலைவர் ராமசாமி பிள்ளைக்கு பண்டித நேருவிடமிருந்து வந்துள்ள கடிதம் பிரமுகர் திரு. த. நா. காங்கிரஸ் காரியக் கமிட்டியில் பரிசீலிக்கப்படும் என்று தெரிகிறது. கடிதத்தில் என்ன எழுதப்பட்டுள்ளதென்பது மிகவும் இரகசியமாக வைக்கப்பட்டுள்ளது: திருவாங்கூர் தமிழ் நாடு காங்கிரஸ் கிளர்ச்சி பற்றியே அக்கடிதம் இருக்கு மெனவும் நம்பப்படுகிறது.

ஆச்சரியம்! —ஆனால் உண்மை?

சென்னை மாநிலத்தில் உள்ள கல்லூரிகளில் இண்டர்; பி. ஏ.; பி. எஸ். ஸி; பி. காம்;—முதலிய வகுப்புகளில் சேர இடங்கள் காலியிருப்பதாக சென்னை பல்கலைக் கழக ரிஜிஸ்திரார் அலுவலகச் செய்தி ஒன்று கூறுகிறது. இண்டர் வகுப்பில் ஆண்களுக்கு ஆயிரக்கணக்கிலும், பெண்களுக்கு 200-க்கு அதிகமாகவும், பி. ஏ. வகுப்புக்கு 820 இடங்களும், பி. எஸ். ஸிக்கு 81-ம், பி. காம் வகுப்பிற்கு 178 இடங்களும் காலி இருக்கின்றன. கல்லூரிகளில் சேர்ந்து படிக்க

கழகக் கூட்டங்கள்

★

விளநகர்

(மாயூரம் வட்டம்)
சிவன் கோயில் கீழ வீதியில்
17—7—54 சனி மாலை
தலைவர்: என். கிட்டப்பா
பேசுவோர்:
என். வி நடராசன்
ஏ. கோவிந்தசாமி, எம் எல் ஏ
கே. எஸ். சௌந்தரராசன்

★

காங்கய நல்லூர்!

17—7—54 சனி மாலை
பேசுபவர்:
இரா. நெடுஞ்செழியன்

சொற் பயிற்சிக் கூட்டம்

16—7—54 மாலை 6 மணிக்கு வடசென்னை பிரசாரப் பகுத்தறிவு மன்றத்தில் சி. ஆர். பால சுந்தரம் தலைமையில் 'கலை' என்னும் பொருள் பற்றி சொற் பயிற்சிக் கூட்டம் நடைபெறும். தோழர்கள் எ. எஸ். வேணு, டி. செல்வராசன், ஏ. வி. நேசன் ஆகியோர் பேசுவர்.

வாழ்க்கை ஒப்பந்தம்

17—7—54 காலை விருதம்பட்டில் (வ. ஆ) தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தலைமையில் தோழர் வி. டி. நேசன்—தோழியர் ராதா அம்மாள் வாழ்க்கை ஒப்பந்தம் நடைபெறும்.

சங்க திறப்பு விழாவும் பொதுக்கூட்டமும்

17—7—54 மாலை 6 மணிக்கு சைதை, காரணீஸ்வரர் கோவில் கோடியில், சைதாப்பேட்டை 48-வது டிவிஷன் வரி செலுத்துவோர், குடியிருப்போர் சங்கத் திறப்பு விழாவும், பொதுக்கூட்டமும் தோழர் எம். கன்னியப்பன் தலைமையில் நடைபெறும். பல பிரமுகர்கள் பேசுவர்.

மும்முனைப் போர் முழக்க நாள் விழா

சென்னை, ஜூலை 15—

இன்று காலை 7 மணியளவில் சென்னை 43-வது வட்டம் மீர்சாகிப்பேட்டை தி. மு. கழகக் கட்டடத்தில், மும்முனைப் போராட்ட முழக்க நாள் விழாவினை ஒட்டி, தோழர் முகவை ஆர். சன். பாண்டியன் கொடி ஏற்றி வைத்தார்.

இப்படியும் ஒரு 'நாடகம்!'

"மீர்சாபூர் எனும் இடத்தில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் பேசுவதற்காக பண்டித நேரு வந்தார். மேடை மீது ஏறியதும் மக்களுக்கு புன் முறுவலுடன் அஞ்சலி செய்தார். உட்காருவதற்காகப் பின்புறம் திரும்பியதும் அங்கு, வெள்ளி தங்க முலாம் பூசப்பட்ட 'சிம்மாசனம்' ஒன்று அந்த முடிசூடா மன்னனுக்காகப் போடப்பட்டிருந்ததாம்! ஏழைப்பங்காளராகிற நேரு—அவர் எப் படிச் சகிப்பார் அந்தக் கொடுமை'யை! உடனே சீறினார்—'ஏன் இந்த ஆடம்பரம் எல்லாம்! எனக்கு இதெல்லாம் பிடிக்காது! எடுத்துவிடுங்கள்!" என்று சொல்லி, ஒரு மர நாற்காலியில் உட்கார்ந்து கொண்டாராம்! பின்னர், மக்களைப் பார்த்து, "பார்த்தீர்களா? நானே எனக்குத் தேவையான ஆசனத்தைத் தேடிக்கொள்ள வேண்டியிருக்கிறது!" என்றாராம்! எப்படி?

விருப்பமுள்ள மாணவர்கள் சென்னை பல்கலைக் கழக ரிஜிஸ்திரார்—இருந்து தகவல் பெற்றுக் கொள்ளலாம்.

செய்திக்கதிர்

ஆதரவு

உலக நீதிமன்றத்தில் ஜபருல்லாகானை ஒரு நீதிபதியாகத் தேர்ந்தெடுப்பதில் இந்தியா தனக்கு ஆதரவு தர வேண்டுமென பாகிஸ்தான் சர்க்கார் இந்தியாவைக் கேட்டுக் கொண்டிருக்கிறது.

★

சிபார்சு

அகில இந்திய கூட்டுறவு வீட்டு போர்டு ஒன்றும் அகில இந்திய கூட்டுறவுக் கவுன்சில் ஒன்றும் அமைக்குமாறு ராஜ்ய விவசாய மந்திரிகள் குழு சிபார்சு செய்தது. இத்தீர்மானம் ஸ்ரீநகரில் நடைபெறும் ராஜ்ய விவசாய மந்திரிகள் மாநாட்டில் வைக்கப்படும்.

★

நீதி—நிர்வாகம்

1955 ஜனவரி முதல் நீதி நிர்வாகப் பிரிவினை சென்னை நகரம், மதுரை, திருச்சி ஆகிய மாவட்டங்களில் அமுல் செய்யப்படும் என்று தெரிகிறது.

★

தீர்ப்பு

முன்னாள் அமைச்சரும், நேபாள காங்கிரஸ் காரியக் கமிட்டி உறுப்பினருமான கே. ஐ. சிங்கை காவலில் வைத்தது சட்ட விரோதம் என்று நேபாள சுப்ரீம் கோர்ட் தீர்ப் வித்தது.

★

கோரிக்கை

காங்கிரசில் பதவி வகிக்கும் எம். எல். ஏ., எம். பி.-க்கள் உள்பட அவர்கள் வழக்கறிஞர்களாக இருந்தால், அவர்கள் வழக்கறிஞர் தொழில் நடத்துவதை விடவேண்டுமென்று ஹைதராபாத் பிரதேச காங்கிரஸ் காரியக் கமிட்டி சுற்றறிக்கை ஒன்று அனுப்பியிருக்கிறார்.

★

வேலை நிறுத்தம்:

கொல்கத்தாவுக்கு வடக்கே 10 மைல் தூரத்தில் சவாராவில் மண்பாண்டத் தொழில் நிலையத்தைச் சேர்ந்த 3,000 தொழிலாளர்கள் சம்பள உயர்வு போனஸ் இவைகள் பற்றி வேலை நிறுத்தம் செய்துள்ளனர் என்று தெரிகிறது.

★

அங்கீகாரம்:

சென்னை சட்ட சபையில் நிறைவேற்றப்பட்ட 1954 ஆண்டு சென்னை பொது விற்பனை வரி சட்டத்துக்கு இந்திய ஜனாதிபதி அங்கீகாரம் அளித்திருக்கிறார்.

★

விவாதம்:

இலங்கையில் உள்ள உதவி இந்தியத் தூதுவர் நேசார், சென்னையில் முதல் அமைச்சர் காமராஜரை சந்தித்து இலங்கை இந்தியர் பிரச்சினை பற்றி விவாதித்தார் என்று தெரிகிறது.

★

மானியம்:

நேப்பாளத்துக்கு இந்திய சர்க்கார் கிராமக் குடிதண்ணீர் நீர்ப்பாசன திட்டங்களுக்காக இந்த ஆண்டு முதலில் நான்கு தவணைகளில் ரு 50 லட்சம் மானியம் வழங்கும். இதற்கான ஒப்பந்தம் ஒன்று கையெழுத்தாகிற்று.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால், அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று (11, குளிர் நாராயண செட்டித் தெரு, இராயபுரம்) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை, எம். ஏ.